IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.258/2021
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25p.m.

வா.சா. 1 சாட்சி ராஜகனி @ அங்கம்மாள் க.பெ.பழனிச்சாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 24.03.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட 80 செண்டில் 30 செண்டுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 செண்டுக்கு பட்டா வழங்கவில்லை என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்தின் புலஎண் என்ன என்றால் 31/3 ஆகும். மேற்படி 50 செண்டுக்கு நான்குமால் விபரம் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2. ஏற்கனவே பல வழக்குகள் தாக்கல் செய்து சாட்சிமளித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.192/2010 என்ற வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 10.9.2020ல் விசாரணைக்கு பின்பு தள்ளுபடியானது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், எனது சித்தி திரவியம் என்பவரும் வாதிகளாக இருந்தோம் என்றால் சரிதான்.

3. மேற்படி அசல் வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் இருளாயி அம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் நான் வாதி தரப்பில் 1வது சாட்சியாகவும், எனது சித்தி திரவியம் வாதி தரப்பில் 2வது சாட்சியாகவும் சாட்சியமளித்துள்ளோம். மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலான ஆவணங்கள் இவ்வழக்கிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.1 மேற்படி அ.வ.எண்.192/2010 வழக்கில் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கின் விபரங்களை யார் கூறினார் என்றால் நான்தான் கூறினேன். எனக்கு தற்போது வயது 70 ஆகும். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1955 ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த இருளாயி அம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் எனது தாயாரின் தாயார் ஆவார்.

5. மேற்படி அ.வ.எண்.192/2010 வழக்கில் நாங்கள் வாரிசு அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கும், இருளாயிஅம்மாளுக்கும் என்ன உறவுமுறை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.192/2010ன் தீர்ப்புரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி தீர்ப்புரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. சர்வே எண் 31/3 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் 31/3A மற்றும் சர்வே எண் 31/3B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் 31/3B பழனிச்சாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 31/3A ல் உள்ள 30 சென்டை பாண்டி ( எ) கொடிப்பாண்டிக்கு கிரையம் கொடுத்துள்ளேன்.

ஆனால் பட்டா என்பெயரில்தான் உள்ளது. பட்டா பாண்டி மகன் சூர்யா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழக்குச்சொத்தை 3ம்தரப்பினருக்கு சட்டப்படி கிரையம் செய்யலாமா என்றால் எனது பெயரில் உள்ள 30 செண்டை மட்டும்தான் எனக்கு பணம் அவசியமாக மருத்துவசெலவுக்கு தேவைப்பட்டதால் கிரையம் செய்தேன்.

7. நான் மேற்படி 30 செண்டு மட்டும் எனக்கு பாத்தியப்பட்டது என்று நினைத்தாலேயே மேற்படி 30 செண்டை விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ஏற்படுத்தப்பட்ட தேதியில் பரிவர்தனை பத்திரம் பற்றி நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.11 ஆவணத்தை வேறு வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்களை வருவாய்துறை விசாரணையில் தாக்கல் செய்தேனா என்றால் செய்தேன்.

8. மேற்படி ஆவணங்களை நான் இதுவரை எந்த விசாரணையிலும் தாக்கல் செய்யவில்லை என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 2008 ஆகும். வா.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என்று சட்டப்படி நடவடிக்கை எடுத்தேனா என்றால் RDO நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு இவ்வழக்கில் 2021ல்தான் வா.சா.ஆ.2 செல்லாது என்று சட்டகாலத்திற்கு மேலான காலதாமதத்துடன் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

9. பழனிச்சாமி பெயருக்கு பின்னிட்டு சர்வே எண் 31/3Bக்கு அவரது மகன் செல்வக்குமார் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை செண்டு விஸ்தீரணம் என்றால் 50 செண்டு ஆகும். தற்போதும்

மேற்படி செல்வக்குமார் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.507/2010 என்ற வழக்கை மாண்புமிகு மதுரை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், எனது சித்தி திரவியமும் வாதிகள் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் பிராது வா.சா.ஆ.4 என்றாலும், மேற்படி வழக்கு தள்ளுபடியானது என்றாலும் சரிதான். அ.வ.எண்.777/2012 என்ற வழக்கை மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இருளாயி அம்மாளின் வாரிசுகள் நாங்கள் என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கை மேல்நடத்தவில்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தள்ளுபடியானது என்றால் சரிதான்.

10. வழக்குச் சொத்தை நான் அனுபவம் செய்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இரசீது செலுத்தியுள்ளேன். அந்த இரசீதை தாக்கல் செய்துள்ளேன். தற்போதும் நான் இருளாயி அம்மாள் வாரிசு என்ற முறையில்தான் வழக்கை நடத்துகிறேன் என்றால் சரிதான். மேற்படி இருளாயி அம்மாள் 2022ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி இருளாயி அம்மாளின் கணவர் பெயர் வீரணகவுண்டர் என்றாலும் அவரது ஒரே மகன் பெயர் பழனிச்சாமி என்றாலும் சரிதான்.

11.இவ்வழக்கின் 1ம்பிரதிவாதி சித்ராவின் மாமனார்தான் பழனிச்சாமி என்றால் சரிதான். எனது பாட்டி பெயர் பாப்பாத்தி என்றாலும், நான் இருளாயி என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.192/2010 வழக்கில் பாப்பாத்தி என்பவர்தான் எனது பாட்டி என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இருளாயி

அம்மாளின் நேரடி வாரிசு கிடையாது என்று அ.வ.எண்.192/2010வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

12. எனது சித்தி திரவியமும் அ.வ.எண்.192/2010 வழக்கில் வீரணக்கவுண்டரின் மகள் என்று காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண் 31/3Bல் கட்டுப்பட்ட 50 சென்டு வீரணக்கவுண்டர் மகன் பழனிச்சாமிக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இருளாயி அம்மாளின் வாரிசு நான் என்பதை காட்டக்கூடிய கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கொடிவழி ஜாபிதாவை அ.வ.எண்.192/2010ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தை பிரதிவாதிகளின் முன்னோர்களும், அவர்களுக்கு பின்னிட்டு பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

13. 30 வருடங்களுக்கு மேலாக மதுரையில் குடியிருந்து வருகிறேன். நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில்தான் குடியிருக்கிறேன். தாவாச் சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றும், வழக்குச் சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.11 எந்த காலத்திலும் நடைமுறைக்கு வந்ததில்லை என்றும், அதன்படி நான் அனுபவம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எந்த விசாரணையிலும் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணம் என்று தீர்மானிக்கவில்லை என்றால் சரியல்ல.

14. இருளாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கோ, எனது சித்தி திரவியம் என்பவருக்கோ எந்த காலத்திலும் உரிமையில்லை

என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் விபரங்களான நான்குமால் விபரங்கள் குறிப்பிடவில்லை என்றாலும், தாவாச் சொத்து எந்த பகுதியில் அமைந்துள்ளது என்ற விபரத்தை பிராதிலும் குறிப்பிடப்படாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.10p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.